# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 02.07.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 184 பக்கங்கள் : 12







## இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு பாராளுமன்றில் நாளை அஞ்சலி!

### இறுதிக் கிரியை திருமலையில் அரச நிகழ்வாக நடைபெறும்

கொழும்பு, ஜூலை 02

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக நாளை புதன்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக் கிரியைகள் அவரின் சொந்த இடமான திருகோணமலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அரச நிகழ்வாக நடைபெறவுள்ளது.

இதேநேரம், இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அவரின் வீட்டுக்கு சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். வடக்கு, கிழக்கு முழுவதும் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நடை பெற்றன. அத்துடன், தமிழ்

11

## இந்தியா வருமாறு சஜித்துக்கு அழைப்பு



கொழும்பு, ஜூலை 02

**எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவை இந்தியாவுக்கு வருகை தருமாறு அந்த நாட்டு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

இந்தத் தகவலை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாவதற்கு முன்னதாக இந்தியாவுக்கு வருமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. இதன்படி, அவர் விரைவில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

ஜனாதிபதி ரணில் - சஜித் இணைவு தொடர்பில் இந்தியா அதிக கரிசனை கொண்டுள்ளது. இந்நிலையில், சஜித் பிரேமதாஸவின் இந்தப் பயணத்தின்போது ரணில் விக்கிரமசிங்கவுடனான இணைந்து செயல்படுமாறு வலியுறுத்தப்படும் என்று

11

## பஸ் கட்டணம் குறைவடைந்தது!

கொழும்பு, ஜூலை 02

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 5.07 வீதத்தால் பேருந்து கட்டணங்கள் குறைவடைந்தன. இதற்கான அறிவிப்பை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி, பேருந்துக் கட்டணம் 2 ரூபாயால் குறைக்கப்பட்டது. குறைந்தபட்ச பேருந்து கட்டணமாக 28 ரூபாயே அறவிடப்படும் என்று தேசிய

11

## சம்பந்தனின் மறைவுக்கு இந்திய பிரதமர் இரங்கல்!

புதுடில்லி, ஜூலை 02

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், நீதி மற்றும் கண்ணியம் போன்றவற்றை பெற்றுக் கொடுக்க பாடுபட்டவர் இரா. சம்பந்தன் - என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு தொடர்பில் மோடி



விடுத்த அஞ்சலிக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தியப்

11

## நம் நாட்டில் ஏற்பட்ட பிளவுகளை குறைக்க அயராது பாடுபட்டவர்!

### ஜனாதிபதி சம்பந்தனுக்கு இரங்கல்

கொழும்பு, ஜூலை 02

ஒரு தேசியத் தலைவராக இரா. சம்பந்தன் நம் நாட்டில் ஏற்பட்ட பிளவுகளைக் குறைக்க அயராது பாடுபட்டார் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரான இரா. சம்பந்தனின் மறைவையொட்டி அவர் விடுத்த இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இரா. சம்பந்



தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு தேசியத் தலைவராக நம் நாட்டில் ஏற்பட்ட பிளவுகளை குறைக்க அயராது பாடுபட்டார். அவரின் இழப்புக்கு நாடு முழுவதுமே இரங்கல் தெரிவிக்கும் - என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

## ஆசிரியர்கள் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 02

தமது கோரிக்கைகளுக்கு விரைவில் பதில் வழங்குமாறு கோரி ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலைகளுக்கு முன்பாக போராட்டம் நடத்தவுள்ளன.

ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடுகளை நீக்குதல், சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை,

11

## கடற்படை சிப்பாய் உயிரிழப்பு; கண்டித்து யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 02

கடற்படை சிப்பாய் உயிரிழந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்கக் கோரியும் இந்தப் போராட்டத்தில் கோஷம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மருதடி சந்தியில் இருந்து போராட்டம் ஆரம்பமானது.

அங்கிருந்து பேரணியாக இந்திய துணைத் தூ



தரகத்துக்கு சென்ற போராட்டக்காரர்களை பொலிஸார் இடைமறித்தனர். இதன் பின்னர், ஐந்து பிரதிநிதிகள் துணைத் தூதரக அதிகாரியை சந்தித்து மனு அளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்திய அதிகாரியை சந்தித்த மீனவர்கள், "இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து ஜூன் 24ஆம் திகதி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர்களை கைது செய்ய முற்பட்டவேளை, கடற்றொழிலாளர்களின் செயல்பாட்டால் கடற்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இவ்வாறான செயல்பாடு

11

## காயங்கள் காரணமாக ஒவ்வொருநாளும் நாட்டில் 32 பேர் உயிரிழக்கின்றனர்!

கொழும்பு, ஜூலை 02

ஒவ்வொரு நாளும் குறைந்தது 32 பேர் ஏதோ ஒரு காரணத்தால் காயங்களுக்கு உள்ளாகி இறக்கின்றனர். இவ்வாறு வருடாந்தம் 12 ஆயிரம் உயிரிழப்புகள் நிகழ்கின்றன என்று சுகாதார அதிகாரிகளின் தரவுகள் தெரிவித்தன.

ஜூலை 1 முதல் 7ஆம் திகதி வரை தேசிய காயம் தடுப்பு வாரம் நேற்று ஆரம்பமானது. இதையொட்டி வெளியிடப்பட்ட தரவு அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தகவல்களின்படி காயங்கள் காரணமாக வருடாந்தம் 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். இது சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினரை பாதிக்கும் விடயமாகும்.

காயங்கள் உயிரிழப்புகளை விளைவிப்பது மட்டுமல்லாமல், குடும்பங்கள் மற்றும் சுகாதார அமைப்பு மீது கணிசமான பொருளாதார சுமையையும் ஏற்படுத்துகிறது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் இனத்தின் தலைமை பாத்திரத்தை வகித்த இரா. சம்பந்தன் இன்று நம்மோடு இல்லை. ஒருவர் மரணித்த பின்னர் அவரைப் பற்றி தரக்குறைவாக விமர்சிப்பது அழகல்ல என்பது நமது பாரம்பரியம் நமக்கு கற்றுத்தந்த ஒன்று. ஆனாலும் அதனையும் மீறி சமூகவலைத்தளங்களில் சிலர் அவரை கண்டபடி விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

சம்பந்தன் ஐயாவை இந்தப் பத்தியில் பல தடவைகள் நாமும் விமர்சித்திருக்கின்றோம். ஆனால், இன்று விமர்சிப்பதற்குரிய நேரமல்ல. அவர் குறித்து சில மாதங்களுக்கு முன்னர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஒரு கருத்தை சொன்னபோது அது சரியானதாக இருந்தாலும் விக்னேஸ்வரன் அதனை சொல்லக் கூடாது என்று கடும்கோபம் கொண்டவர்கள் நாங்கள்.

சம்பந்தன் ஐயா மறைந்த செய்தியை அறிந்ததும், தமிழகத்திலிருந்து ஈழத்து இனநெருக்கடியை நீண்டகாலமாக அருகே இருந்து அவதானித்துவரும் மூத்த பத்திரிகையாளர் பகவான் சிங் எழுதி அனுப்பிய குறிப்பிலிருந்து ஒரு வரியைத் தருவது அவர் பற்றிய கனகச்சிதமான குறிப்பாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

"சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்பில் ஐக்கியத்தை ஏற்படுத்த அவரின் ஆங்கிலத் தொடர்புத் திறன், விவாதத் திறன் மற்றும் ஈழத்தளம் ஆகியவற்றை பயன்படுத்தியிருந்தால் அவர் இன்னும் பலவற்றை சாதித்திருக்க முடியும்." - இதுவே, பகவான்சிங்கின் குறிப்பு.

இனி இன்றைய விடயத்துக்கு வருகின்றோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடங்கிவிட்டமையைக் கவனிக்க முடிகின்றது. அவர் தான் போட்டியிடுவது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனாலும், அவருக்கு வாக்களிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் ஒளி விளம்பரங்கள் தெற்கில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகத் தொடங்கிவிட்டன. அதாவது, பிரசாரத்தை அவர் தொடங்கிவிட்டார்.

அவரது பிரசாரம் பற்றி அறிந்ததும் தெற்கில் நிலைமைகளை கூர்ந்து கவனித்துவரும் ஒரு சிந்தனைக்கூடத்தின் இயக்குநருடன் பேசினேன். சில வாரங்களுக்கு முன்னர் அவரோடு பேசியபோது, மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவோடு ரணில் போட்டியிடமாட்டார் என்றும் அப்படிப் போட்டியிட்டால் நிச்சயம் சிங்கள மக்கள் அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றும் திடமாக கூறியவர், இப்போது சற்று மாறுபட்ட கருத்தோடு இருப்பதை அவதானிக்க முடிந்தது.

அவரே காரணம் சொன்னார். சில வாரங்களுக்கு முன்னதாக, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான அணியின் முக்கியஸ்தர் அமைச்சர் மகிந்த அமரவீர, அம்பலாங்கொடையில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்திக்காட்டினார்.

அது ரணிலுக்கான ஆதரவு கூட்டம் என்பது ஆராய்ச்சிக்கு உரியதல்ல. ஆனால், பல ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்கள் அனைவருமே மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் ஆதரவாளர்கள்தான் என்பதும் ஆராய்ச்சிக்கு உரியதல்லவே.

அதாவது மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக ரணிலுக்கு ஆதரவை தெரிவிப்பதற்கு முன்னதாகவே அவரின் ஆதரவாளர்கள் ரணிலை ஆதரிக்க முடிவெடுத்துவிட்டதையே அந்தக் கூட்டம் வெளிக்காட்டியது.

இப்போது கடந்த வாரத்தில் நடந்த இரண்டு கூட்டங்களும் அதனை மேலும் நிரூபித்திருக்கின்றன.

கடந்த சனிக்கிழமை மொனராகலையில் மகிந்த அணியைச் சேர்ந்தவரும் தற்போது ரணில் ஆதரவாளருமான இராஜாங்க அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத்திலும் இருபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாத்தறையில் அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஏற்பாடு செய்திருந்த மற்றுமொரு பொதுக் கூட்டத்திலும் இருபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். இவர்கள் எல்லோருமே மகிந்தவின் மொட்டு ஆதரவாளர்கள்தான். ஆனால், இப்போது ரணிலை ஆதரிக்கத் தயாராகிவிட்டனர்.

இந்த விடயங்களை பகிர்ந்துகொண்ட அந்த சிந்தனைக் கூடத்தின் இயக்குநர், மகிந்த ஆதரிப்பதுகூட பெரியவிடயமாக இருக்காது போலவே தெரிகின்றது. ஆனாலும், மகிந்த பெரும்பாலும் பகிரங்கமாக ரணிலை ஆதரிப்பதைத் தவிர்த்து, தனது ஆதரவாளர்களை அவர்களின் விருப்பத்துக்கு வாக்களியுங்கள் என்று நடுநிலைமை வகிக்கவும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் குறித்து ஆராய்வதற்காக இன்று கூடவிருக்கும் பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சிகள் அதனை கடுமையாக விமர்சிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், எதிர்க்கட்சியிலிருந்து சிலர் ரணில் தரப்புக்கு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று.

- ஊர்க்குருவி.

# ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்கவும் மறுக்கவும் முடியாதவர்

## சம்பந்தனுக்கு பழனிசாமி இரங்கல்

சென்னை, ஜூலை 02

"இலங்கை தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாதவரும், மறுக்க முடியாதவருமான இரா. சம்பந்தனின் இழப்பு செய்தி மிகுந்த வேதனை தருகிறது." என்று அ. தி. மு. க. பொது செயலாளரான எடப்பாடி பழனிச்சாமி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,



"இலங்கை தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாதவரும், மறுக்க முடியாதவருமான ஈழத் தமிழ் சமூகத்தின் மிகப் பெரிய தூணாக திகழ்ந்தவருமான இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று இரவு 11 மணி அளவில் தனது 91ஆவது வயதில் கொழும்பில் காலமானார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

இலங்கைத் தமிழரின் அடுத்த தலைமுறை பாதுகாப்பான வாழ்வியலை கட்டமைக்க ஒரு சரியான அடித்தளத்தை அமைத்த தமிழின தலைவரான அவரின் இழப்பு ஈழத்தமிழர் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. அன்னாரின் ஆன்மா எல்லாம்வல்ல இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன்." - என்றுள்ளது. (ஐ)

# அரச நிர்வாக அதிகாரிகளுக்கு ரூ. 25 ஆயிரம் கொடுப்பனவு

கொழும்பு, ஜூலை 02

அரசாங்க நிர்வாக சேவை பிரிவு அதிகாரிகளுக்கு நேற்று முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 25 ஆயிரம் ரூபாய் விசேட மாதாந்தக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரை கால சேவையின் அடிப்படையில் வழங்கப்பட்ட விசேடக் கொடுப்பனவுக்கு பதிலாக, சேவையின் கால அளவை பொருட்படுத்தாமல் 25 ஆயிரம் ரூபாய் விசேட மாதாந்த கொடுப்பனவாக வழங்குவதற்கு கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி இந்த கொடுப்பனவு பொறியியல் சேவை, கட்டடக்கலை சேவை, நில அளவையாளர் சேவை அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவின் கையொப்பத்துடன் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்க கிளிநொச்சி நகரில் கூடைகள்!

கிளிநொச்சி, ஜூலை 02

"பிளாஸ்ரிக் இல்லாத நாட்டை உருவாக்குவோம்" என்ற தொனிப் பொருளில் பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகளை கிளிநொச்சி நகரில் பொருத்தமான இடங்களில் பொலிஸார் வைத்து வருகின்றனர்.

கலைச்செல்வி மோகனபவனின் நினைவு தினத்தை முன்னிட்டு இந்த செயல்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.



பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகளை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிடம் வழங்கும் நிகழ்வில், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்தது சில்வா, கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கரைச்சி பிரதேச சபையின் பொறுப்பதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கதிர்காமம் ஆலயத்தில் உதவி பூசகர்கள் மோதல்

கொழும்பு, ஜூலை 02

கதிர்காமம் ஆலயத்தில் பணியாற்றும் உதவி பூசகர் ஒருவர் மற்றோர் உதவி பூசகரால் தாக்கப்பட்டு காயமடைந்தார்.

காயமடைந்தவர் கதிர்காமம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதலுக்கு உள்ளான உதவி பூசகர் உபுல் ரத்நாயக்க நேற்று மாலை 6.00 மணியளவில் கதிர்காமம் ஆலய வளாகத்தில் வைத்து சக உதவி பூசகரால் தாக்கப்பட்டதாக தெரிவித்தார்.

கோவிலுக்கு வந்த சட்டத்தரணி ஒருவரை உரிய முறையில் நடத்தாதால் அதே ஆலயத்தைச் சேர்ந்த உதவி பூசகர் தாக்கினார் என்று உபுல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

பக்தர்கள் முன்னிலையில் முகம் மற்றும் மார்பு பகுதியில் தன்னை மற்றைய பூசகர் தாக்கினார் என்றும் அவர் மற்றோர் இளைஞரையும் தாக்கினார் எனவும் எனினும், அவர் அச்சம் காரணமாக முறைப்பாடு செய்யவில்லை எனவும் காயமடைந்தவர் பொலிஸாருக்குக் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.07.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆனி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சம்பந்தனின் மறைவு

இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் நான்கு தசாப்தகால அரசியல் பயணம் முடிவுற்றது. தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த ஒரு முது பெரும் அரசியல்வாதி என்னும் வகையில் அவரின் மறைவுக்கு "ஈழநாடு" சிரம்தாழ்த்திய அஞ்சலியை பதிவு செய்கின்றது. சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் கூட்டமைப்பின் தாய் கட்சியென்னும் அடையாளத்தை கொண்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியினதும் தலைவராக இருந்தவர்.

சம்பந்தன் அரசியல் வாழ்விலிருந்து விடைபெற்றிருக்கும் இன்றைய காலகட்டம் என்பது சம்பந்தனை பெருமைப்படுத்தக்கூடியதாக இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். ஏனெனில், அவரின் தலைமைத் துவத்தின் கீழ் இயங்கிய இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுமே அவரின் காலத்திலேயே சீரழிந்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் போய்விட்டது. இலங்கை தமிழ அரசுக் கட்சி குற்றுயிருடன் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வலுவான மாற்று அரசியல் கட்சி இல்லாமைதான் தமிழ் அரசு கட்சியின் ஒரே யொரு பலமாகும்.

இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்டு எழுபத்தைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் மிதவாத அரசியல் பாசறையில் உருவாகியவர்களில் அனுபவமும் ஆளுமையும்மிக்க தலைவர்களில் சம்பந்தன் இறுதியானவர். சம்பந்தனுடன் மூத்த அரசியல் தலைவர் என்னும் பாரம் பரியம் முடிவுறுகின்றது.

இதிலுள்ள சங்கடமான - அதேவேளை நெருடலான அரசியல் உண்மை என்னவென்றால், தமிழ் மக்கள் கண்ட அனுபவமும் ஆளுமையும்மிக்க அரசியல்வாதிகள் எவருமே தங்களின் காலத்தில் அரசியல் அடைவுகள் எதனையும் அடையாமலேயே மறைந்து போயிருக்கின்றனர் - அடுத்த தலைமுறைக்கு ஆக்கபூர்வமான எந்தவோர் அரசியல் மரபையும் விட்டுச் செல்லாதவர்களாகவே மறைந்து போயிருக்கின்றனர். இந்த வரிசையில் இறுதியாக சேர்ந்திருப்பவர்தான் சம்பந்தன்.

2009இற்கு பின்னரான அரசியல் காலகட்டம் என்பது சம்பந்தனின் காலகட்டம்தான். இந்தக் காலகட்டத்தில் சம்பந்தன் அரசியல் ரீதியில் எதனை அடைந்தார் என்றால் பதில் பூச்சியமாகும். வெறும் வார்த்தைகளிலும் வாக்குறுதிகளிலுமே அவரின் காலம் கழிந்திருக்கின்றது. உண்மையில், சம்பந்தன் அரசியல் தலைமைத்துவத்தை பொறுப்பேற்ற காலகட்டமானது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு திருப்புமுனையாகும். மிதவாத அரசியலின் தோல்வி - ஆயுதப் போராட்டத்தின் தோல்வி ஆகிய இரு தோல்விகளிலிருந்தும் கற்றுக்கொண்டு பயணிக்க வேண்டிய காலகட்டம்தான் சம்பந்தனின் காலகட்டமாக இருந்தது. ஆனால் சம்பந்தனோ, தனது வரலாற்று முக்கியத்துவத்தை உணராத ஒருவராகவே தனது அரசியல் வாழ்வை முடித்திருக்கின்றார்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது சில வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. அதனை உச்சளவில் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், சம்பந்தன் வாய்ப்பைத் தவறவிட்டார். வாய்ப்புகளை தவறவிடுவதில் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று. தங்களைப் பற்றி அளவுக்கதிகமான நம்பிக்கையிலிருந்து சிந்திக்கும்போது சில வாய்ப்புகள் தவறவிடப்படுவதை உணர முடியாமல் போகின்றது - இரண்டு. கடந்தகால வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள மறுக்கின்றபோது மீண்டும் முன்னர் இழைக்கப்பட்ட தவறுகளே மீளவும் நிகழ்கின்றன.

இந்த விடயத்தில் சம்பந்தன் இரண்டாவது வகை. சம்பந்தனிடம் தலைமைத்துவம் இருந்ததுதான் எவ்வாறான தீர்மானங்களை எடுத்தாலும்கூட, அதனை கேள்விக்கு உள்ளாக்கக் கூடியவர்கள் அரசியல் அரங்கில் இருந்திருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தை உச்சமாக பயன்படுத்தியிருந்தால் 2015இல் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அரசமைப்பில் உள்ளவற்றை முதலில் முழுமையாக அமுல்படுத்துவதில் வெற்றி பெற்றிருக்கலாம் அத்தோடு, இந்தியாவின் உதவியுடன் வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கான வலுவான அடித்தளமொன்றை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், பேருந்து மீண்டும் தவறவிடப்பட்டது. பேருந்தை தவறவிடுவதே தமிழரின் அரசியல் வரலாறாக நீண்டு செல்கின்றது. இந்த வரலாற்று பட்டியலில் சம்பந்தனும் சேர்ந்துவிட்டார். எவ்வாறான அரசியல் கருத்து பேதங்கள் இருந்தாலும்கூட தமிழ்த் தேசிய அரசியலில் நான்கு தசாப்தங்களாக வாழ்ந்திருக்கும் ஒருவர் என்னும் வகையில் மூத்த தலைவர் சம்பந்தனுக்கு சிரம்தாழ்த்துவது நமது கடமையாகும்.

# ஜனாதிபதியின் கருத்துக்கு எதிராக இன்று கறுப்புப் பட்டி போராட்டம்!

### இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

ஜனாதிபதியின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலைகளுக்கு முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு கறுப்புப் பட்டி அணிந்தவாறு போராட்டம் நடைபெறும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அந்தச் சங்கத்தின் யாழ். வலய செயலாளர் தாராளசிங்கம் பிரகாஷ் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கில் ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டம் நடைபெறவில்லை என்று அரசாங்கம் பிரிவினைவாத கருத்தை வெளியிட்டமையை கண்டித்தும் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களுடனான சந்திப்பில் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று கூறியமைக்கும் எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை அதிபர் சேவை சங்க யாழ் மாவட்ட பிரதிநிதி துரைராசா ஜீவானந்தன், இலங்கை ஆசிரியர் சேவை சங்க வலிகாமம் கல்வி வலய பிரதிநிதி பரமசிவம் கஜமுகன் ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

# காணியில் பலாக்காய் பறித்த தாயாரை தாக்கிய தனயன்!

கொழும்பு, ஜூலை 02

இரவு உணவுக்காக மகனின் காணியில் பலாக்காய் பறித்த தாயார் கடுமையாக தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதலை அவரின் மகன் குடும்பத்துடன் தலைமறைவாகிவிட்டார் என்றும் தெரிய வருகின்றது.

மொனராகலை - தொம்பகஹவெல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், காயமடைந்த தாயார் சியம்பலாண்டுவ ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தாக்குதலுக்கு உள்ளானவரும் அவரின் கணவரும் தங்களின் வீட்டையும் காணியையும் மகனுக்கு வழங்கியுள்ளனர். இதன் பின்னர், அவர்கள் அயலிலுள்ள சிறிய வீடொன்றில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், தாயார் இரவு உணவுக்காக மகனுக்கு தாங்கள் வழங்கிய காணியிலிருந்து பலாக்காய் ஒன்றை பறித்துள்ளார். இதனால், ஆத்திரமடைந்த மகன் தாயாரை தாக்கியுள்ளார். இதில், அவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து, மகன் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# குற்றப்புலனாய்வு பிரிவில் பியூமி முன்னிலையானார்

கொழும்பு, ஜூலை 02

பியூமி ஹன்சமாலி நேற்று திங்கட்கிழமை காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் விசாரணை பிரிவில் முன்னிலையானார்.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

"நான் மிகவும் நேர்மையான முறையில் இந்தப் பணத்தை சம்பாதித்தேன். போதைப் பொருள் விற்பனையோ அல்லது சட்டவிரோதமான முறையிலோ இந்த பணத்தை நான் சம்பாதிக்கவில்லை. தனி ஒரு பெண்ணாக எனது தொழிலை முன்னெடுத்து வரும் நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுகளை என்மீது சுமத்துவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

என்னிடம் 20 வங்கி கணக்குகள் இருக்கின்றன என்று கூறப்படும் தகவல்கள் பொய். 9 வங்கிக் கணக்குகள் மட்டுமே உள்ளன. இவற்றை எனது தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகிறேன்.

நான் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதால்தான் எந்தவித அச்சமுமின்றி நான் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முற்பட்டுள்ளேன் - என்றார். (ஐ)


## மணவாளக் கோல திருவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 01

வரலாற்று சிறப்புமிக்க அரியாலை பிரப்பங்குளம் மகாமாரியம்மன் ஆலயத்தின் 1008 சங்காபிசேகம் - மணவாள கோல பூந்தண்டிகை திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் மகாமாரியம்மனுக்கு விஷேட அபிசேகம், பூசைகள் நடைபெற்று எழுந்தருளி அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த இடத்தில் தொட்டாலும் பலமுறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். புகழ் கௌரவம் கூடும்.

**கடகம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நண்பர்களால் அனுகூலம் உண்டு. அலுவலகத்தில் மரியாதை கூடும். அதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செய்ய தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**துலாம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள். நட்பால் ஆதாயம் அடையும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். காரியம் சித்தியாகும்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

# ஸ்டாலின் ஆட்சிக்காலம்தான் தி. மு. கவின் இருண்டகாலம்

## அன்புமணி சுட்டிக்காட்டு

விழுப்புரம், ஜூலை 02

தி. மு. கவின் இருண்ட காலம் தற்போது நடைபெறும் ஸ்டாலின் ஆட்சிக்காலம்தான். சமூக நீதிக்கு ஸ்டாலின் மற்றும் அவரின் தலைமையில் உள்ள அமைச்சர்கள் எதிரானவர்கள்- இவ்வாறு பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பா. ம. க. சார்பில் போட்டியிடும் சி. அன்புமணியை ஆதரித்து விழுப்புரம் பாப்பனப்பட்டு, பனையபுரம் உள்ளிட்ட கிராமங்களில் அன்புமணி மற்றும் அவரது ஆகியோர் பிரசாரம் செய்தனர்.



இதன்போது உரையாற்றிய அன்புமணி தெரிவித்தவை வருமாறு, உங்கள் ஊரைச் சேர்ந்தவர் சட்டமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்றால் நீங்கள் பா. ம. கவை ஆதரிக்க வேணடும். அரசு மதுக்கடைகளை மூட பா. ம. கவை ஆதரியுங்கள்.

இச்சமூகத்துக்கு தி. மு. க. துரோகம் செய்து வருகிறது.

வாக்குகளை பணம் கொடுத்து வாங்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள். உங்கள் கோபத்தை காண்பிக்க நல்ல வாய்ப்பு இந்தத் தேர்தலாகும்.

கள்ளக்குறிச்சியில் இறந்தவர்களை தி. மு. க. அரசே கொலை செய்தது. மகளிர் உரிமைத் தொகையாக கொடுக்கும் பணம் உங்கள் வீட்டில் உள்ளவர்களால் அரசு மதுக்கடைக்கு கொடுக்கும் பணமாகும். இந்தத் தேர்தலில் நல்ல முடிவு எடுங்கள்- என்றார்.

(எ)

# “முதல்வரின் வெளிநாட்டு பயணம் குறித்து வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்”

சென்னை, ஜூலை 02

தொழில் முதலீடுகள் தொடர்பான முதல்வரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய பிரதி அமைச்சர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை, திருவல்லிக்கேணியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியவை வருமாறு, ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. அருகிலேயே பெங்களூரு விமான நிலையம் அமைந்திருக்கும் நிலையில் ஓசூரில் புதிய விமான நிலையம் அமைப்பது சாத்தியமா என்பது குறித்து மேலும் ஆராய வேண்டும்.

ஏற்கனவே தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் ஸ்பெயினுக்கு பயணம் மேற்கொண்டார். அதில் ஈர்க்கப்பட்ட முதலீடுகளின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அதற்கு முந்தைய பயணத்தில் ஈர்க்கப்பட்ட முதலீடுகளும் வந்து சேரவில்லை. தி. மு. க. ஆட்சி அமைந்த பிறகு இங்கிருந்த நிறுவனங்கள் கூட மூடிவிட்டு வெளிநாடு சென்றது தான் நடந்திருக்கிறது.


முதல்வர் எதற்காக அமெரிக்காவுக்குச் செல்கிறார், எத்தனை நிறுவனங்களின் முதலீடுகளை தமிழகத்துக்குக் கொண்டு வருகிறார் என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்- என்றார். (எ)

# முதல்வர் கனவுடன் கட்சி ஆரம்பம் நடிகர் விஜய்மீது திருமா விமர்சனம்

மதுரை, ஜூலை 02

முதலமைச்சர் கனவுடன் தற்போது அரசியல் கட்சி தொடங்குகின்றனர். அடுத்த முதல்வர் நான்தான் என்று அறிவித்துக் கொள்கின்றனர் என்று நடிகர் விஜய்யை விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் விமர்சித்துள்ளார்.

மேலூர் அருகே மேலவளவு கிராமத்தில் கடந்த 1997 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தவிசாளர் முருகேசன் உட்பட 6 பேரின் 27 ஆவது நினைவு தின நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,



நான் மக்களுக்காக அரசியலுக்கு வந்தவன். “பூமாலை கிடைக்கும் என நினைக்க வேண்டாம், கைவிலங்கிட தயாராக வேண்டும்” எனது 27 வயதில் பிரகடனம் செய்தது இதைத் [illegible] மக்களை அரசியல் [illegible] [illegible] யத்தை ஒழிக்க வேண்டும் என்று அரசியல்வாதிகள் சொல்கின்றனர். மக்கள் மதுபானக் கடைகளை மூட வேண்டும் என்கின்றனர்.


இந்தப் படுகொலை சம்பவத்துக்குப் பதிலுக்கு பதில் கொடுக்க வேண்டும் என்ற தூண்டுதல் இருந்தது. அப்போது எனக்கும் பொறுப்பு இருந்ததால் அதைச் செய்யவில்லை. போராட்டம், பேரணி என அரசியல் நடவடிக்கையாக மாற்றினேன். இதனால்தான் வி. சி. க. பாராளுமன்றம் வரை சென்றிருக்கிறது- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சமத்துவம், கண்ணியம், நீதிக்காக தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர்!

## சம்பந்தன் மறைவுக்கு ஜெய்சங்கர் இரங்கல்


Dr. S. Jaishankar
@DrSJaishankar

இலங்கை தமிழ் தலைவர் திரு.இரா.சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைந்தேன்.

பல தசாப்தகாலமாக எனக்கும் அவருக்கும் இடையில் நடைபெற்ற பல்வேறு சந்திப்புகள் மற்றும் உரையாடல்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவில்கொள்கின்றேன். இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் சமத்துவம், கௌரவம் மற்றும் நீதிக்கான போராட்டத்துக்காக அவர் தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்திருந்தார்.

அவரது குடும்பத்தினருக்கும் அபிமானிகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

Translate post

கொழும்பு, ஜுலை 02

"தமிழர்களுக்கான சமத்துவம், கண்ணியம் மற்றும் நீதிக்காக தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர் இரா. சம்பந்தன்."

-இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

"இலங்கைத் தமிழர் தலைவர் ஆர்.சம்பந்தனின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வருத்தமடைகிறேன். பல தசாப்தங்களாக அவருடனான எனது பல சந்திப்புகள் மற்றும் உரையாடல்களை நினைவுபடுத்துகிறேன். இலங்கையில் தமிழர்களுக்கான சமத்துவம், கண்ணியம் மற்றும் நீதிக்காக தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர். அவரது குடும்பத்தினருக்கும் ஆதரவாளர்களுக்கும் இரங்கல்கள்" என அவர் தனது அனுதாபத்தில் தெரிவித்துள்ளார். (அ)

# தமிழ் பேசும் மக்களின் தலைமகனின் பேரிழப்பு

## ஹரீஸ் எம்.பி இரங்கல்.

கொழும்பு, ஜுலை 02

இலங்கை அரசியலில் இருந்த மூத்த சிறுபான்மை தலைவர் இரா. சம்பந்தன் ஐயா காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தேன். தமிழ் மக்களின் ஆணிவேராக நோக்கப்படும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் சட்டத்தரணி இரா. சம்பந்தன் காலமானதாக அறிந்து மிகவும் கவலை அடைந்தேன் என முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் விடுத் துள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது அனுதாப செய்தியில்-

சிறுபான்மை மக்களின் உரிமை சார்ந்த பிரச்னைகளின் போதும் அவருடன் நேருக்கு நேராகவும், தோளோடு தோளாகவும் நின்ற நாட்கள் ஏராளம். தன்னை சார்ந்த இனத்தின் உரிமைகளுக்காக விட்டுக்கொடுப்புக்களோ அல்லது தளர்வுகளோ இல்லாது போராடிய தலைமையை இன்று தமிழ் மக்கள் இழந்திருக்கிறார்கள் என்பதை விட அனுபவமும், ஆற்றலும் கொண்ட சிரேஷ்ட அரசியல் ஆளுமையை இலங்கை தேசம் இழந்திருக்கிறது என்பதே உண்மை.

முஸ்லிங்களின் அபிலாசைகளை யும், சிங்கள மக்களின் உணர்வு களையும் மதித்த ஒரு தமிழ் தலைமை சம்பந்தன் ஐயா. இவ ரின் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது -என தெரிவித்துள்ளார். (அ)

# சம்பந்தனுக்கு சஜித் இரங்கல்

கொழும்பு, ஜுலை 02

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கைக்கு சேவையாற்றிய இரா .சம்பந்தனின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதற்கான அவரது அர்ப்பணிப்பு, நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகும்.

அவருடைய நேர்மையான மற்றும் நியாயமான தலைமை எனக்கும் மற்றவர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். உண்மையில், இது ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கின்றது-என்று குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை அரசியலின் சகோதரத்துவத்துக்கு இரா. சம்பந்தன் மறைவு பெரும் இழப்பாகும்

கொழும்பு, ஜுலை 02

இரா. சம்பந்தன் மறைவு இலங்கை அரசியலின் சகோதரத்துவத்திற்கு பெரும் இழப்பாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவர் எனது நீண்ட கால அரசியல் நண்பர். நாங்கள் இருவரும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அவரது மறைவு இலங்கை அரசியலின் சகோதரத்துவத்திற்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் இழப்பில் இருந்து அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மீண்டு வருவதற்கு எனது ஆறுதல்களைத் தெரிவிக்கின்றேன்-என்றார். (அ)

# தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பு!

## அங்கஜன் எம்.பி. அனுதாபம்

கொழும்பு, ஜுலை 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் இழப்பு தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனது சட்டத் தொழிலை தியாகம் செய்து மக்களுக்காக தன்னை அரசியலில் ஈடுபடுத்திய பெருமகான் அவர்.

மேலும் தமிழர்களின் மூன்று வகையான போராட்ட காலங்களிலும் தனது அரசியல் சாணக்கியத்தையும், அனுபவத்தையும் பல சந்தர்ப்பங்களில் இராஜதந்திரங்களாக அவர் பயன்படுத்தியிருந்ததை இத்தருணத்தில் நினைவில் கொள்ள வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# கொள்கை வேறு கோட்டை வேறு ஆனாலும் எங்களது அஞ்சலிகள்

## சம்பந்தனின் மறைவு குறித்து டக்ளஸ்



கொழும்பு, ஜுலை 02

கொள்கை வேறு கோட்டை வேறு. ஆனாலும் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எமது அஞ்சலிகள் என தெரிவித்துள்ளார் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அவர் தனது அனுதாபச் செய்தியில்-

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் வயதில் எமக்கு மூத்தவர், கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் அரசியல் தளத்தில் எம்முடனும் சம காலத்தில் பயணித்தவர்.

முரண்பாடுகள் இருப்பினும் காணும் பொழுதுகளில் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதுண்டு.

வயது மூப்பின் காரணமாக அவர் மரணித்து விட்ட செய்தி துயரைத் தந்துள்ளது. அவரது இழப்பில் துயருறும் சகலருக்கும் ஆறுதல் கூறுகின்றேன். அவருக்கு அஞ்சலி மரியாதை- என தெரிவித்துள்ளார். (அ)

# மிக நீண்ட காலமாகத் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்தவர் சம்பந்தன்

## வடக்கு மாகாண ஆளுநர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக காலம் சென்ற இரா. சம்பந்தன் காணப்படுகின்றார்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மைக் கருதி அன்னார் செயற்பட்டார் என்றால் மிகையாகாது. இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துகொண்டிருந்த குரல் இன்று மௌனித்துள்ளது. காலம் சென்ற இராஜவரோதயம் சம்பந்தனின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் பிரிவால் மீளாத் துயரில் வாடும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்-என தெரிவித்துள்ளார்.

# அசைக்கமுடியாத உறுதி கொண்டவர் சம்பந்தன்!

## நாமல் ராஜபக்ஷ இரங்கல்

கொழும்பு, ஜுலை 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வருத்தமடைகின்றேன். அவர் தனது கொள்கைகளில் அசைக்கமுடியாத உறுதி கொண்டவர் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான இந்த நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத அரசியல் நியமனங்களை மேற்கொண்டு வருகின்றனர் ஆளுநர்கள்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 02

**மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள வேளையில், ஆளுநர்கள் சட்டவிரோத அரசியல் நியமனங்களை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.**



பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ், 273 ஆவது கட்டமாக வத்தளைப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்கு 1,200,000 ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரூபாவுக்கும் டொலர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டில் உள்ள அனைவரும் அரசியல் மயப்படாமல் செயற்படவேண்டும்.

தென் மாகாண ஆளுநர் சட்டவிரோதமான அரசியல் நியமனங்களை மேற்கொண்டு வருகிறார்.

தேர்தலை நடத்தாமல் தடம்புரளும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆளுநரின் கடிதத்தின் மூலம், தமது அடிவருடிகளை நியமிக்கும் செயற்பாடுகள் தென் மாகாணத்தில் இடம்பெற்று வருகிறது.

ஆளுநர்கள் இவ்வாறான தவறுகளை மேற்கொள்ளக்கூடாது.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆளுநர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் நீதிமன்றில் சாட்சியமளிக்க வேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜுலை 02

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவுகள், பெற்றோர் என பலரும் கலந்துகொண்டனர். (அ)



# ஹிருணிகா மேன்முறையீடு!



கொழும்பு, ஜுலை 02

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, தனக்கு விதிக்கப்பட்டுள்ள மூன்று வருடச் சிறைத் தண்டனையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்றில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தன்னை பிணையில் விடுவிக்குமாறு ஹிருணிகா பிரேமச்சந்திர கொழும்பு மேல் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இது தொடர்பான கோரிக்கை எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் பரிசீலிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச அதிகாரிகளுக்கு விசேட கொடுப்பனவு!

கொழும்பு, ஜுலை 02

அரச சேவையின் நிர்வாக சேவைப் பிரிவு அதிகாரிகளுக்கு நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 25,000 ரூபாய் விசேட மாதாந்தக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரை காலச் சேவையின் அடிப்படையில் வழங்கப்பட்ட விசேடக் கொடுப்பனவுக்குப் பதிலாக, சேவையின் கால அளவைப் பொருட்படுத்தாமல் 25,000 ரூபாய் விசேட மாதாந்தக் கொடுப்பனவாக வழங்குவதற்குக் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி இந்தக் கொடுப்பனவு இலங்கை பொறியியல் சேவை, இலங்கை கட்டடக் கலை சேவை மற்றும் இலங்கை நில அளவையாளர் சேவை அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதிப யசரத்னவின் கையொப்பத்துடன் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதமச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# வத்திராயனில் மர்மமான முறையில் தீக்காயங்களுக்கு உள்ளானவர் பலி!

வடமராட்சி, ஜுலை 02

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி இரவு எரியூட்டப்பட்ட நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் இரவு மரணமானார்.

மரணமடைந்தவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளரும், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னாள் இயக்குநருமான சரவணபவானந்தன் சிவகுமார் (பவானி). 44 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான இவர் மருதங்கேணியைச் சேர்ந்தவர்.

குறித்த நபர் தீக்காயத்திற்கு உள்ளானமை தொடர்பான காரணம் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவுமில்லை. யாரும் கைது செய்யப்படவுமில்லை. அவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது. (அ-2)

# கடலில் நீராடச் சென்ற 17வயது மாணவன் மாயம்!

கொழும்பு, ஜுலை 02

கல்கிசைக் கடற்கரையில் நீராடச் சென்ற 17 வயதான மாணவரொருவர் நீரில் மூழ்கிக் காணாமற் போயுள்ளார்.

கல்கிசை, அபேசேகர மாவத்தையில் வசிக்கும் 17 வயதுடைய இளைஞனே நேற்று முன் தினம் தனது நண்பர்கள் இருவருடன் நீராடச் சென்ற நிலையில் இவ்வாறு மாயமாகியுள்ளார்.

குறித்த மூவரும் நீராடிக் கொண்டிருந்தவேளை எதிர்பாராத விதமாக அலையில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், அப்போது உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையின் கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரை மீட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் காணாமற் போன மாணவனைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பாடசாலை அதிபரின் அலுவலகம் உடைக்கப்பட்டுப் பணம் திருட்டு!

கொழும்பு, ஜுலை 02

காலி - வெலிவத்தை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபரின் அலுவலகம் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபரின் அலுவலகத்தில் 11,000 ரூபா பணமும், பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையில் 2 எரிவாயு கொள்கலன்களும் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி பாதுகாப்புக் கமெராக்களும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு சந்தேகநபர்களினால் குறித்த திருட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# பதில் சட்டமா அதிபராக நேற்று பதவியேற்ற பாரிந்த ரணசிங்க

கொழும்பு, ஜுலை 02

சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க பதில் சட்டமாஅதிபராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க முன்னாள் பிரதம நீதியரசரான கே.ஏ. பாரிந்த ரணசிங்கவின் புதல்வராவார்.

சட்ட மா அதிபராக செயற்பட்ட சஞ்ஜய் ராஜரத்தினத்தின் சேவைக்காலம் கடந்த 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்தமையினால் கடந்த சில நாட்களாக சட்ட மாஅதிபர் பதவியில் வெற்றிடம் நிலவியது.

சட்ட மாஅதிபரின் பதவிக் காலத்தை மேலும் 06 மாதங்களுக்கு நீடிக்குமாறு அரசியலமைப்பு பேரவையிடம் ஜனாதிபதி யோசனை முன்வைத்ததுடன் 2 சந்தர்ப்பங்களிலும் அந்த யோசனை பெரும்பான்மையினால் நிராகரிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நிபுணர்களின் வெளியேற்றம் திணறும் இலங்கையின் சுகாதாரத்துறை

## இரு வருடங்களில் 400 பேர் வெளிநாடுகளில் தஞ்சம்

கொழும்பு, ஜூலை 02

**இலங்கை மருத்துவர்கள் 5000 வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கு தகுதி பெறும் சோதனையில் வெற்றிகரமாக சித்தியடைந்துள்ளமை சுகாதார அமைச்சுக்குள் கவலையை அதிகரித்திருப்பதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.**

தற்சமயம் இலங்கை முழுவதிலுமுள்ள அரசாங்க சுகாதார நிறுவனங்களில் 20 ஆயிரம் மருத்துவர்கள் மாத்திரம் பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில், கணிசமான எண்ணிக்கையில் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது பெரும் சவாலாக உள்ளது.

மேலும் ஐக்கிய இராச்சியத்தில் பயிற்சி பெறுவதற்கான தொழில்முறை மற்றும் மொழியியல் மதிப்பீட்டு ஆணையம் பரீட்சையில் பங்கேற்ற 3500 பரீட்சார்த்திகளில்,750 பேர் இலங்கையர்கள். பரீட்சையில் சித்தியடைந்த 2100பேரில் 550 பேர் இலங்கை மருத்துவர்கள்.

ஐக்கிய இராச்சியத்தில் மருத்துவம் பயில வேண்டுமென்றால் பிலாப் சோதனையில் நிச்சயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இந்த முன்னேற்றங்கள் சுகாதார அதிகாரிகளை புருவம் உயர்த்தச் செய்துள்ளது.

ஆதாரங்களின் படி அவர்கள் இந்த விடயத்துக்கு முட்டுக் கட்டை போட்டுள்ளனர்.

இது குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர அசேல குணவர்தன டெய்லி மிரர் ஆங்கில செய்தித் தளத்துக்கு கருத்து தெரிவிக்கையில், "நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் வெளியேற்றம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது-என்றார்.

கணிசமான எண்ணிக்கையில் மருத்துவர்கள் நாட்டில் உள்ளபோதும், கூடுதலாக பயிற்சியாளர்களை நியமிக்க திட்டமிட்டிருந்தாலும் நாட்டை விட்டு வெளியேறும் நிபுணர்களின் முடிவு எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை "மருத்துவர்களுக்கான நிதி ஊக்குவிப்பு மற்றும் சம்பள முறைமை மறுசீரமைப்பு போன்றவற்றை அரசாங்கத்துக்கு முன்மொழிந்த போதிலும், அந்த யோசனையை மருத்துவர்கள் காதில் வாங்குவதைப் போல் இல்லை" என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சம்மில் விஜேசிங்க டெய்லி மிரர் ஆங்கில செய்தித் தளத்துக்குக் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் 400 மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், சுகாதாரத் துறைக்கு இது மிகப் பெரிய பிரச்சினையாக மாறி வருவதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கு சுகாதாரத்துறைப் பணிப்பாளர் பதிலளிக்கையில்-

"நாடு தற்போதுதான் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருகிறது. இந் நேரத்தில் ஊதியத்தை அதிகரிப்பது மிகவும் சவாலானது. இருப்பினும் சம்பள அதிகரிப்பையும் கருத்தில்கொண்டு இந்த விவகாரத்தை தீர்க்க அமைச்சு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

(அ)

# மந்திகையில் விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 02

மந்திகை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-டிப்பர் விபத்தில், படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த நாகசார பாலச்சந்திரன் (வயது-39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானர்.

விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

(அ)

# மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழப்பு!

## அநுராதபுரத்தில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 02

அநுராதபுரம் பிரதேசத்தில் இப்பலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிரிபிட்டியாகம பகுதியில் மகனால் தாக்கப்பட்டு தந்தை ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக இப்பலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இப்பலோகம, ஹிரிபிட்டியாகம பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய தந்தையொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவரது தலையில் பலத்த காயம் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்டவரது 34 வயதுடைய மகன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தினமும் தனது தந்தையை தாக்கி காயப்படுத்துவதாகவும் சம்பவத்தின் போது இருவரும் வீட்டில் தனியாக இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இப்பலோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# இளைஞனை வெளிநாடு அனுப்புவதாக பண மோசடியில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி , 50 இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இளைஞனிடம் இருந்து 50 இலட்சம் ரூபாய் பணத்தை மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

நீண்ட நாட்களாகியும் இளைஞனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்காத நிலையில், இளைஞர் தனது பணத்தை திருப்பிக் கேட்ட வேளை, அதனை கொடுக்க மறுத்ததால், இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (அ)

# ரணிலை ஆதரிக்காத பெரமுனவினருடன் வார இறுதியில் முக்கிய கலந்துரையாடல்!

கொழும்பு, ஜூலை 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காத பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக தீர்மானமிக்க கலந்துரையாடல் ஒன்றை இவ்வார இறுதியில் நடத்தவுள்ளதாக அரசாங்கத்தின் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைத்துள்ளது.

தற்போது பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து ரணிலின் பக்கம் நிற்கும் குழுவுக்கு மேலதிகமாக நாமல் ராஜபக்ச உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதியின் கொள்கைகளுடன் இணக்கம் தெரிவிக்கவில்லை என அறிவித்துள்ள நிலையில், குறித்த குழுவுடன் பொது இணக்கப்பாட்டை உருவாக்குவது தொடர்பில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதற்காக தற்போது பொதுஜன பெரமுனவை முன்னிலைப்படுத்தி ரணிலுடன் செயற்படும் சிரேஷ்ட அரசியல்வாதிகள் சிலர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நாமல் ராஜபக்ச இளம் அமைச்சர்கள் குழுவுடன் இணைந்து செயற்பட தயாராகி வருவதாகவும் அவர் தனது எதிர்கால அரசியல் பாதையை நோக்கிச் செயற்பட்டு வருவதாகவும் தகவல் அறியும் வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு குழுக்களாக தற்போது ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து வருவதாகவும் அதனுள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தலைமையிலான குழு முன்னிலை வகிப்பதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுமதி

## சந்தேகம் எழுப்பும் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, ஜூலை 02

புதிதாக 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ள்தாகக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில், 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவை குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், இலங்கை வரலாற்றில் ஒரே சமயத்தில் இவ்வளவு தொகை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படுவது இதுவே முதல் சந்தர்ப்பமாகுமெனவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஒரே சந்தர்ப்பத்தில் நான்கைந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறப்பதற்கு அனுமதி அளிப்பது குறித்து சந்தேகம் எழுவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட 450 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிர்மாணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான பதிலை வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உள்ளிட்ட அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எவ்வாறு ஒதுக்கப்பட்டன என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் தொழிற்சங்க பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அமைப்பதற்கு பணம் செலவழிக்காமல் வெளிநாட்டு தனியார் நிறுவனங்கள் எரிபொருளை இறக்குமதி செய்து இலாபம் ஈட்டுவதாகக் கூறும் தொழிற்சங்க பிரதிநிதிகள், புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிர்மாணித்தால் அதனையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (அ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூலை 02

வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

மொனராகலை பிரதேசத்தில் ஒக்கம்பிட்டிய பொலிஸ் பிரிவில் போகஸ் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இதேநேரம் அவருடன் பயணித்த மற்றோர் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மொனராகலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருதை உலகறிய செய்த சஹ்ரான் பயங்கரவாத குழுவினர்

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண

சாய்ந்தமருது, ஜுலை 02

**உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களுக்கு முன்னர் சாய்ந்தமருது என்ற ஊரைப் பற்றி உலகம் அறிந்திருக்கவில்லை. ஆனால், இன்று உலகில் உள்ள அனைவருக்கும் தெரிந்திருக்கும் இடமாக சாய்ந்தமருது உள்ளது. இங்கிலாந்து அமெரிக்கா அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் உள்ளவர்களுக்கும் தெரியும். இதற்குக் காரணம் சாய்ந்தமருது பகுதியில் சஹ்ரான் பயங்கரவாத குழுவினர் மறைந்திருந்த செயல்பாடும் அங்கு இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுமாகும் என கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**



சிறுவர் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமை உள்ளிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், நிந்தவூர், சாய்ந்தமருது பொலிஸ் நிலையங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புப் பணியகங்கள் திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முஸ்லிம்களால் ஓதப்படும் குர்ஆனில் எங்கேயாவது தற்கொலை செய்வது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா? என்பதைக் கேட்க விரும்புகின்றேன். மேலும், சில அடிப்படை வாதிகள் குர்ஆனில் குறிப்பிடப்படாத சில விடயங்களைத் திணித்து மார்க்க விடயங்களைப் பிழையாக வழிநடத்த முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இந்தக் குழுவினர்களிடம் இருந்து சிறுவர்கள், இளைஞர்கள் மிக அவதானமாக செயல்பட வேண்டும்.

இந்த நபர்களிடம் இருந்து எமது சமூகத்தை நாங்கள் பாதுகாக்க முன்வர வேண்டும். பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்பதை தொடர்ச்சியாக அவதானிக்க வேண்டும். இவ்வாறான விடயங்களைத் தவிர்ப்பதற்காகவே நாடு முழுவதும் உருவாக்கப்பட்ட புதிய பொலிஸ் நிலையங்களில் அரசாங்கத்தின் விசேட திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 3 பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இப்பணியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன- என்றார். (எ)



# 75ஆவது அகவையில் தடம்பதிக்கும் சல்லி அம்பாள் மகா வித்தியாலயம்

திருகோணமலை, ஜுலை 02

திருகோணமலை சல்லி அம்பாள் மகா வித்தியாலயத்தின் 75ஆவது ஆண்டை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடைபவனி பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமாகி இடம்பெற்றது.

அதிபர் திருமதி தர்மினி ரகுராம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருகோணமலை வலயக் கல்வி அலுவலக முறைசாரா கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. அகிலனும், கௌரவ விருந்தினராக திருகோணமலை கோட்டக் கல்வி அதிகாரி செ. சண்முகநாயகமும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை சல்லி அம்பாள் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் இ. கருணாகரனும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நடைபவனியின்போது சகோதர பாடசாலையான திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய வாயிலில் வைத்து பாடசாலை சமூகத்தினரால் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. (எ)

# அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 20 வயது மகளிர் கரம் அணி சம்பியன்

நிந்தவூர், ஜுலை 02

நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 20 வயதுப் பிரிவு மகளிர் கரம் அணியினர் கல்முனை வலய மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை வலயமட்ட பெரு விளையாட்டு கரம் 17 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 20 வயதுக் குட்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான போட்டிகள் மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி வரலாற்றில் முதல் தடவையாக பங்குபற்றிய அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 20 வயதுப் பிரிவு மகளிர் கரம் அணி முதலிடம் வந்து சம்பியனானது. 17 மற்றும் 20 வயதுப் பிரிவு ஆண்கள் கரம் அணியினர் வெள்ளிப்பதக்கங்ளும் வென்று 3 அணிகள் மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (எ)



# 9 மாணவிகளுக்கு வெற்றிப் பதக்கம்

அக்கரைப்பற்று, ஜுலை 02

அக்கரைப்பற்று வலய மட்ட தமிழ் தினப் போட்டியில் ஒலுவில் அல் - மதீனா வித்தியாலயத்தில் இருந்து இசை, நடனம், கும்மி கோலாட்டம் போட்டிகளில் பங்கு பற்றிய 9 மாணவிகள் வலய மட்டத்தில் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று அல் - முனவ்வறா கனிஷ்ட வித்தியாலயத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இதில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் பொத்துவில் ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகள் பங்குபற்றின.

இதில் ஒலுவில் அல் - மதீனா வித்தியாலயத்தில் இருந்து இசை, நடனம், கும்மி கோலாட்டம் நிகழ்சியில் பங்கு பற்றிய ஏ. ஆகிபா ஷஹ்லா, எம். எஸ். ஆயிஷா, எம். எஸ். ஷாரா அதீமா, ரி. றுஸ்னத் நப்லா, ஜே. அதிகா, ஏ. எம். ரின்சா, ஏ.பி. சைனப் மிஸ்பா, எம். ரி. அக்ஸா, எப். ஹப்ஸா மர்யம் ஆகிய மாணவிகளே வலய மட்டத்தில் வெற்றிப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். (எ)

# திருக்கோணேஸ்வரத்தின் புனிதத்தை பாதுகாக்க கோரி பேரணி





திருகோணமலை, ஜுலை 02

வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தின் புனிதத்தைப் பாதுகாக்க வலியுறுத்தி நேற்றுக் காலை கவனவீர்ப்பு அமைதிப் பேரணி நடைபெற்றது. திருக்கோணேஸ்வரர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள கடைகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்துக்கு இடம்மாற்றுமாறும் இந்தப் பேரணியில் வலியுறுத்தப்பட்டது. திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினாலும் தொண்டர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அமைதிப் பேரணியில் பெருமளவான இந்துக்கள் பங்குபற்றினர். (எ-4)

# "இயற்கை நீதிக்கோட்பாட்டை பின்பற்றி பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுக"

திருகோணமலை, ஜுலை 02

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விடயத்தில் இயற்கை நீதிக்கோட்பாட்டை பின்பற்றி, அவற்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் ஏ. எல். எம். முக்தார் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பர்தா, பஞ்சாபி ஆடைகளை அணிவதற்கு சில பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் அனுமதி மறுக்கப்பட்டபோது தொடரப்பட்ட வழக்குகளில் ஆடை அணிதல் ஒருவரது சுதந்திரம் என்பதுடன் அவரது உரிமையுமாகும் என உயர் நீதிமன்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் முஸ்லிம் மாணவிகள் தமது காதுகளை தெரியக் கூடியதாக தமது பர்தாவை நீக்கிய நிலையில் பரீட்சை எழுத வேண்டும் என்று பரீட்சை திணைக்களம் கூறும் விடயம் எமது நாட்டு அரசமைப்பின் 111 ஆம் அத்தியாயம் மற்றும் உயர் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு முற்றிலும் முரணானதாகும்.

ஏனவே, திருகோணமலை சாஹிரா கல்லூரியின் 70 மாணவிகளின் க. பொ. த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை அநீதியாகும். இவற்றை ஒரு வார காலத்துக்குள் வெளியிடுவதாக கல்வியமைச்சர் வாக்குறுதியளித்து மூன்று வாரங்கள் கடந்துள்ள போதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை தாக்குதலில் 18 பேர் உடல் சிதறிப்பலி

அபுசா, ஜூலை 02

**நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதக் குழுவின் பெண்கள் பிரிவு நடத்திய தற்கொலை படைத் தாக்குதலில் சிக்கி 18 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.**

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள நகரமான குவோசாவில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற திருமண விழா கொண்டாட்டத்தில் முதல் குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. அடுத்த சில நிமிடங்களில் பொது மருத்துவமனையில் தாக்குதல் இடம்பெற்றது. மூன்றாவது சம்பவம் மரண வீடு ஒன்றில் அரங்கேற்றப்பட்டது. இந்தத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், கர்ப்பவதி பெண்களும் உயிரிழந்தனர். சுமார் 30 பேர் படுகாயமடைந்தனர். (எ)

# எந்த வேட்பாளருக்கும் 50 சதவீத ஆதரவில்லை

## இரண்டாம் சுற்றில் ஜனாதிபதி தேர்தல்

தெஹ்ரான், ஜூலை 02

ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்காததைத் தொடர்ந்து தேர்தல் இரண்டாம் சுற்றுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஐந்தாம் திகதி இரண்டாம் சுற்று வாக்களிப்பு நடைபெறவுள்ளது.


கடந்த வாரம் நடைபெற்ற தேர்தலில் மிகக் குறைந்தளவானவர்களே வாக்களித்துள்ளனர்.

சீர்திருத்த வேட்பாளர் மசூத் பெசெக்கியான், தீவிர பழமைவாத வேட்பாளர் மற்றும் அணுவாயுத பேச்சாளர் சயீத் ஜலீல் இருவருக்கும் அதிகளவு வாக்குகள் கிடைத்துள்ளன. எனினும் இரு வேட்பாளர்களும் 50 சதவீத வாக்குகளைப் பெறத் தவறியுள்ளனர்.

மசூத்பெசெக்கியானுக்கு 42.5 வீத வாக்குகளும் ஜலீலிக்கும் 38 வீத வாக்குகளும் கிடைத்துள்ளன. வாக்களிக்கத் தகுதியான 60 மில்லியன் வாக்காளர்களில் 24 மில்லியன் வாக்காளர்கள் மாத்திரமே வாக்களித்துள்ளனர்.

தேர்தல் முடிவுகளை 12 பேர் கொண்ட பேரவை மீளாய்வு செய்த பின்னர் இரண்டு வேட்பாளர்களும் மீண்டும் தங்கள் பிரசாரத்தை ஆரம்பிப்பார்கள். (எ)

# எதிர்க்கட்சி எம். பிக்கள் வெளிநடப்பு, போராட்டம்





புதுடில்லி, ஜூலை 02

நீட் முறைகேடு குறித்தும், மத்திய முகவர்களின் கட்டுப்பாடுகள் குறித்தும் மக்களவையில் விவாதிக்க அனுமதி மறுத்த சபாநாயகரின் முடிவைக் கண்டித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எம்.பிக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தியாவின் 18ஆவது மக்களவை கூட்டத்தொடர் இரண்டு நாட்கள் விடுமுறையைத் தொடர்ந்து நேற்றுக்கூடியது. அப்போது ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு அவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ராகுல் காந்தி, நீட் பரீட்சை முறைகேடு விவகாரத்தை மக்களவையில் எழுப்பினார்.

"பாராளுமன்றத்தில் இருந்து நாட்டுக்கு ஒரு செய்தி பரப்பப்படுகிறது. பாராளுமன்றத்துக்கு நீட் விவகாரம் முக்கியம் என்ற செய்தியை மாணவர்களுக்கு கடத்த விரும்புகிறோம். எனவே, இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும்" என்று ராகுல் காந்தி கூறினார்.

இதனையடுத்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், "பாராளுமன்றத்துக்கு சில விதிமுறைகள் உள்ளன. அதன்படி, ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பிறகு விவாதங்கள் நடத்தப்படும்" என்றார். அதனை ஏற்க மறுத்த எதிர்க் கட்சி எம். பிக்கள் தொடர்ந்து முழக்கம் எழுப்பினர். (எ)



# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!

சியோல், ஜூலை 02

வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது என்று தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச்செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு வடகொரியா அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வருகிறது.

அத்தோடு, கொரிய தீபகற்பத்தில் வடகொரியா - தென் கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில், வடகொரியா நேற்று மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி நிறைவடைந்த நிலையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. வடகொரியாவின் ஜங்யாங் நகரில் இருந்து வடகிழக்கு திசையை நோக்கி 10 நிமிட இடைவெளியில் 2 ஏவுகணைகள் ஏவப்பட்டன. முதல் ஏவுகணை கடலில் விழுந்ததாகவும், இரண்டாவது ஏவுகணை வடகொரிய நிலப்பரப்புக்குள்ளேயே விழுந்ததாகவும் தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

வடகொரியா கடந்த 26 ஆம் திகதி ஏவுகணை சோதனை நடத்திய நிலையில் 10 நாட்களுக்குள் 2 ஆவது முறையாக மீண்டும் ஏவுகணை சோதனை நடத்திய சம்பவம் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# வெளிநாட்டு மாணவர்களின் வீசா கட்டணம் அதிகரிப்பு!

## அவுஸ்திரேலியா அறிவிப்பு

கன்பெரா, ஜூலை 02

வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசா கட்டணத்தை அதிகரித்துள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.


அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்பவர்கள் அதிகரித்துள்ளதால் வீடுகள் தொடர்பான வர்த்தகம் கடும் அழுத்தத்தை சந்தித்துள்ள நிலையில் புலம்பெயர்பவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக அவுஸ்திரேலியா வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசா கட்டணங்களை அதிகரித்துள்ளது.

நேற்று முதல் வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசா கட்டணங்கள் 710 அவுஸ்திரேலிய டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, விசிட்டர் வீசாவை வைத்திருப்பவர்களும் தற்காலிக பட்டதாரி வீசாக்களை வைத்திருப்பவர்களும் மாணவர் வீசாவுக்கு விண்ணப்பிப்பதை அவுஸ்திரேலியா தடை செய்துள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் மாற்றங்கள் எங்களின் சர்வதேச கல்வி முறையின் ஒருமைப்பாட்டை மீட்டெடுக்க உதவும் எனத் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கிளார் ஓ நெய்ல், நியாயமான சிறிய சிறந்த குடியேற்ற முறையை உருவாக்க உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் மாதம் வெளியான புள்ளிவிவரங்கள் அவுஸ்திரேலியாவுக்கான குடிவரவு 60 வீதத்தால் அதிகரித்துள்ளதை வெளிப்படுத்தியிருந்தன.



வீசா கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மாணவர்கள் கனடா, அமெரிக்காவை விட அதிக கட்டணத்தை செலுத்த வேண்டியிருக்கும்.

வெளிநாட்டு மாணவர்கள் அவுஸ்திரேலியாவில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கும் சட்டத்தின் ஓட்டைகளை அடைப்பதற்கு முயல்வதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ)

# தேர்தல் முடிவுகளை தொடர்ந்து பிரான்ஸில் வெடித்தது வன்முறை

## வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் தீக்கிரை

பாரிஸ், ஜூலை, 02

பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து அதனை எதிர்க்கும் தரப்பினர் தலைநகர் பாரிஸில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

தீவிர இடதுசாரிகள், இஸ்லாமிய ஆதரவாளர்கள் உட்பட சமூகத்தின் பலதரப்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு, அங்கு வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

வர்த்தக நிலையங்களும், வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்களும் இடம்பெறுகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலையே மொட்டு ஆதரிக்க வேண்டும்!

## இது நாமலுக்கான நேரம் அல்ல என்கிறார் எஸ்.பி.

கொழும்பு, ஜுலை 02

"இது நாமல் ராஜபக்சவுக்கான நேரம் அல்ல, எனவே, ராஜபக்சக்கள் ஒரு அடி பின்வாங்கி, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவையே எடுக்க வேண்டும்." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவையே பொதுஜன பெரமுன கட்சி எடுக்கும் என நம்பு கின்றேன். ஏனெனில் 2024 முதல் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது பாரிய வெற்றியாகும்.

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டுக்கு கிடைத்துள்ள செய்தி உண்மையாலுமே ஓர் நற்செய்திதான். இரு தரப்பு கடன் மறுசீரமைப்பால் நாட்டில் இடைநிறுத்தப்பட்டுள்ள சுமார் 200 அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிக்ககூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)



## நெல்முத்து விநாயகருக்கு குடமுழுக்கு!

கிளிநொச்சி, ஜுலை 02

கல்மடு குளத்தின் 93ஆவது ஆண்டு விழாவும் நெல் முத்து விநாயக பெருமான் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெரு விழாவும் நேற்று முன் தினம் நடைபெற்றன.

இதன்போது, 93 பெண்கள் கல்மடு குளத்தில் இருந்து நீர் எடுத்துவந்து விநாயகப் பெருமானுக்கு அபிசேகம் மற்றும் விசேட பூசைகள் நடைபெற்றன.

நேற்று திங்கட்கிழமை 93 பானைகளில் பொங்கல் பெரு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இரண்டு பஸ்கள் மோதி விபத்து; 15 பேர் காயம்!

கொழும்பு, ஜுலை 02

கொழும்பில் இருந்து கண்டி செல்லும் பிரதான வீதியில் வேவல்தெனிய பிரதேசத்தில் நேற்று இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஸூம் தனியார் பஸ்ஸூம் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வத்துப்பிட்டிவல மற்றும் வரக்காபொல வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## ரயில் மீது கல்வீச்சு!

கொழும்பு, ஜுலை 02

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.40 மணியளவில் ரம்புக்கனை நோக்கி பயணித்த ரயிலின் மீது தெமட்டகொடை பகுதியில் வைத்து கல் வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ரயிலில் அதிக பயணிகள் பயணித்துக் கொண்டிருந்தனர். கல் வீச்சுத் தாக்குதலினால் ரயிலின் யன்னல் மற்றும் கதவு சேதமடைந்துள்ளன.

கல் வீச்சுத் தாக்குதலையும் மீறி ரயில் தொடர்ந்து தனது பயணத்தை மேற்கொண்டது. (அ)

# புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கிய அரசியல் கட்சியை விசாரியுங்கள்

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தல்

கொழும்பு, ஜுலை 02

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கூறியமை போன்று விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுதங்களை அரசியல் கட்சி ஒன்று வழங்கியிருந்தால் அது குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கம்பஹாவின் கிரிபத்கொடையில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்கள் மற்றும் மக்கள் சந்திப்பிலேயே நாமல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் கூறியமை போன்று அரசியல் கட்சி ஒன்று தமிழீழ விடுதலை புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியிருந்தால் அது தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்-என்றார்.

இந்த சந்திப்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர மற்றும் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

முன்னதாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பிள்ளையான் என்று அறியப்பட்ட இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன், "தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆரம்ப காலத்திலும் - தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு முதன்முதலிலும் ஆயுதங்களை தந்தவர்கள் ஜே. வி. பியினரே.", என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

# சிறப்பு பொலிஸ் பிரிவுகளை நிறுவ ஐ. நா. நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அமைச்சர் டிரான் அலஸ்

கொழும்பு, ஜுலை 02

சர்வதேச ரீதியாக அதிகரித்துவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்த்து போராடுவதற்கு சிறப்பு பொலிஸ் பிரிவுகளை நிறுவுவதற்கு ஐ. நா. உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க இலங்கை தயாராகவுள்ளது - இவ்வாறு பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொலிஸ் உயரதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வன்முறைகளின்போது அந்த மோதல் வலயங்களில் சிக்கும் பொதுமக்களின் அவல நிலை, சைபர் குற்றம், ஆயுதமயமாக்கப்பட்ட தொழில்நுட்பம் போன்ற பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்களின் தோற்றம் உட்பட சர்வதேச ரீதியாக பாதுகாப்புச் சவால்கள் அதிகரித்து வருகின்றமை சிக்கலான தன்மையை அனைத்து நாடுகளுக்கும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களின் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமை சர்வதேச அமைதிக்குத் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சர்வதேச பாதுகாப்புக்காக இலங்கையின் அர்ப்பணிப்பு தொடர்ந்தும் இருக்கும் என்பதோடு இலங்கை பொலிஸ் பிரிவு தற்போது தயார் நிலையில் உள்ளது. அத்துடன் இலங்கை பொலிஸ் பிரிவு தரமானதாக காணப்படுகின்றமை நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் பாதாள உலகக்



கும்பல்களின் அச்சுறுத்தலை சமாளிக்க விசேட பொலிஸ் பிரிவுகளை நிறுவுவது நிலைநிறுத்துவது பற்றி ஐக்கிய நாடுகள் சபை பரிசீலனை செய்ய வேண்டும்.

இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் அனுபவம் வாய்ந்த பொலிஸ் அதிகாரிகள், குற்றவியல் நீதித்துறை வல்லுநர்களுக்குப் பங்களிக்க எமது நாடு தயாராக இருக்கிறது. இதே போன்று, பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் பங்காளி நாடுகளுடன் தனது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள இலங்கை தயாராக உள்ளது-என்றார். (எ)

# சாவகச்சேரி விபத்தில் மருத்துவர் படுகாயம்!

தென்மராட்சி, ஜுலை 02

மோட்டார் சைக்கிளும் காரும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மருத்துவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஏ-9 வீதி - சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் இந்த விபத்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த காரும் சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியே விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த மருத்துவர் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பூந்தொட்டியில் மோ.சைக்கிள் மோதியதில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 02

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியின் கலேவெல பகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கலேவெல நகரில் வீதியின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காரியமடித்த மற்றும் லக்கல பகுதிகளைச் சேர்ந்த 39 மற்றும் 27 வயதுகளையுடைய இருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு அன்னையின் திருவுருவ முத்திரை வெளியிடப்பட்டது

## ஆடி மாதத் திருவிழா இன்று




மன்னார், ஜூலை 02

மன்னார் மடு மாதாவின் திருவுருவம் பொறிக்கப்பட்ட முத்திரை நேற்று வெளியிடப்பட்டது.

மடு அன்னை அரசியாக முடிசூட்டப்பட்டதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டே இந்த முத்திரை வெளியிடப்பட்டது.

இதேவேளை, மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை அன்ரனி ஞானப்பிரகாசத்தின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை முத்திரை வெளியிடும் நிகழ்வு நடைபெற்றது.

தபால்மா அதிபர் ருவன் சத்குமார விசேட முத்திரையை மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் வழங்கினார்.

நிகழ்வில் தபால் திணைக்கள அதிகாரிகள், கத்தோலிக்க மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சத்துரி பிந்து, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

### கடற்படை...

மீள ஒரு தடவை நடைபெறாது இருக்க இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்று கோரிக்கை விடுத்தனர். (ஐ)

### சம்பந்தனின்...

பிரதமரின் குறிப்பில்,

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் மூத்த தலை வர் ஆர். சம்பந்தனின் குடும்பத்தினருக்கும் நண் பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்னாருக்கும் எனக் கும் இடையே நடை பெற்ற சந்திப்புகள் இனிய நினைவுகளாகும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், நீதி மற்றும் கண்ணியம் போன்றவற்றை பெற்றுக்கொடுக்க அவர் பாடுபட்டார்.

அன்னாரின் மறைவு இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள அவரின் நண்பர்களுக்கும், அவரை பின்பற்றுபவர்களுக்கும் பெரும் இழப்பாகும் - என்றுள்ளது.

### இந்தியா வருமாறு...

நம்பப்படுகின்றது. இவர்களின் இணைவு குறித்து சிங்கப்பூரில் முன்னெடுக்கப்பட்ட முயற்சி கள் அனைத்தும் தோல்வியடைந்தன. இதில், இந் தியாவுக்கும் பங்கு இருப் பதாக அப்போது பேசப்பட்டது. இந்த நிலையி லேயே இருவரின் இணைவு தொடர்பான இறுதி முயற்சியாகவே சஜித் பிரேமதாஸவுக்கு இந்தியா வருமாறு அழைக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு உயர் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

### ஆசிரியர்...

இன்றைய தினம் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத் தில் ஈடுபட இலங்கை ஆசிரியர் சங்கம் யாழப் பாணத்தில் நேற்று அழைப்பு விடுத்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 3இல்)

### இரா. சம்பந்த...

அரசுக் கட்சியின் பணிமனைகளில் கட்சி கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

சம்பந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு - பொரளை ஏ. எவ். றேமண்ட் மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

நாளை புதன்கிழமை நண்பகலின் பின்னர் பூதவுடல் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்படும்.

பின்னர் பிற்பகல் 4 மணிக்கு சம்பந்தனின் பூதவுடல் பாராளுமன்றத்தில் இருந்து அவரின் சொந்த இடமான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இறுதிக் கிரியைகள் அரச நிகழ்வாக சம்பந்தனின் (இந்து) மத முறைப்படி நடைபெறும். அரச நிகழ்வாயினும் சம்பந்தனின் குடும்பத்தினரின் கோரிக்கையின் பிரகாரம் இராணுவ மரியாதை நிகழ்வு நடைபெறும் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# பெரமுனவின் எம். பிக்கள் ரணிலுக்கே ஆதரவளிப்பர்

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர



கொழும்பு, ஜூலை 02

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தானும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானித்துள்ளனர் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களான கலாநிதி ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க, அலி சப்ரி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் தேர்தலில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையும் தேர்தலில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் என்று நான் நம்புகிறேன். எனினும், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறுவிதமாக கருதுகின்றனர். எங்களுக்கு கட்சி நிறங்கள் முக்கியமல்ல, தேசியக் கொடியே முக்கியம் -என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# சகலரும் சேர்ந்து வாழ்வோமென உலகறிய சொன்னவர் சம்பந்தன்!

## மனோ கணேசன் எம். பி. இரங்கல்

கொழும்பு, ஜூலை 02

தான் முதலில் ஓர் இலங்கையன். அப்புறம் தமிழன். ஆனால், சிங்கள பௌத்த இலங்கையன் அல்ல. சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற "பல்லின-பன்மொழி-பன்மத" இலங்கையன். பன்மைத்துவம் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழ்வோம் என்று உலகறிய சொன்னவர். அப்படி சொல்லி சிங்க கொடியையும் யாழ்ப்பாண மேடையில் தூக்கி காட்டியவர். அதற்காக தமிழ் தேசியவாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர் - இவ்வாறு மறைந்த தலைவர் இரா சம்பந்தன் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மேலும், எல்லாவற்றையும் மீறி நல்லாட்சி காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவை நம்பி இரண்டு வருடத்துக்கு குறையாமல், வழிகாட்டல் குழுவில் அமர்ந்து, புது அரசியலமைப்பை எழுதி முடிக்கப் பாடுபட்டவர். ரணிலை நம்பி "தீபாவளிக்கு தீர்வு", "பொங்கலுக்கு தீர்வு" என்று கெடு கூறி அதற்காகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர்.

அறிவு, ஆன்மா, உடல் என்ற மனித கூறுகளில், உடலால் மட்டுமே பலவீனமாக இறுதி காலத்தில் இருந்தார். அறிவும் ஆன்மாவும் பலம் இழக்கவே இல்லை. நான் அவரது கட்சி அங்கத்தவன் இல்லை. ஆனால், இந்த "சிங்கக் கொடி முதல் வழிகாட்டல் குழு" சம்பவங்கள் வரை எல்லாவற்றையும் அவருக்கு மிக பக்கத்தில் இருந்து நேரடியாக பார்த்தவன் நான்.

அவரை மதித்து, அவரை பயன்படுத்தி, பிரிபடாத இலங்கைக்குள் தீர்வு தேட தவறிய அனைத்து சிங்கள பௌத்த தேசிய கட்சிகளின் தலைவர்களும் இப்போது வரிசையாக வந்து, "இரா. சம்பந்தனுடன் எனக்கு முப்பது வருட பழக்கம், நாற்பது வருட பழக்கம், ஐம்பது வருட பழக்கம் என்று அளப்பார்கள். அதையும் உங்கள் சாகாத ஆன்மா எங்கோ இருந்தபடி கேட்க போகிறது, சம்பந்தன் ஐயா." பிரிவோம்..! சந்திப்போம்..! - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 02

நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு நாளைய தினம் பாராளுமன்றில் அஞ்சலி செலுத்தப்படுவதாலேயே நாளைய அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம்,இன்றைய தினம் ஆரம்பமாகும் பாராளுமன்ற அமர்வில், வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை நடைபெறுவதற்கு மட்டும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

டைபெறவிருந்த இந்தத் தீர்மானம் குறித்த விவாதம் நடைபெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### பஸ் கட்டணம்...

போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஷஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கூடுதலாக கட்டணம் வசூலிக்கும் பேருந்துகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமைதியான இலங்கையை காண விரும்புகிறது கனடா!

## தூதுவர் எரிக் வோல்ஷ் கருத்து

கொழும்பு, ஜூலை 02

**கனடா, அமைதியான வளமான மற்றும் நல்லிணக்கமான இலங்கையை காண விரும்புகிறது என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனடாவின் தூதுவர் எரிக் வோல்ஷ் தெரிவித்துள்ளார்.**

ஜூலை 1, கொண்டாடப்படும் கனடா தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கனடாவின் சர்வதேச உதவியானது பெண்கள் மற்றும் சிறுமிகளை மேம்படுத்துவதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய காலநிலைக்கு ஏற்ற வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மற்றும் மோதலுக்குப் பின்னரான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்குமான இலங்கையின் முயற்சிகளுக்கு வழங்கப்படுகிறது என்று எரிக் வோல்ஷ் கூறினார்.

முழுமையான பொருளாதார மீட்சியை முன்னெடுத்துச் செல்லும் இலங்கையுடன் கனடா தொடர்ந்து நிற்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

கனடா கூட்டமைப்பின் 157ஆவது ஆண்டு நிறைவை, பிரமிக்க வைக்கும் புவியியல் அம்சங்கள் மற்றும் ஏராளமான இயற்கை வளங்களைக் கொண்ட நாட்டில் கொண்டாடுகிறோம். அங்கு சமத்துவம், பன்முகத்தன்மை மற்



றும் அனைத்து தனிநபர்களுக்கும் மரியாதை ஆகியவை ஆழமாக மதிக்கப்படுகின்றன.

மேலும் கனடா, ஒரு நீண்ட ஜனநாயக பாரம்பரியம், இரண்டு உத்தியோகபூர்வ மொழிகள், வளமான பன்முக கலாசார சமூகம், பழங்குடி மக்களுடன் நல்லிணக்கத்திற்கான அர்ப்பணிப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இதுவே, உலகெங்கிலும் உள்ள மக்களை கனடாவிற்கு ஈர்க்கும் ஒரு பெரிய பகுதியாகும் என்றும் கனேடிய தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் 25 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 02

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 25 இந்திய மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையிலேயே 25 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் 4 படகுகளையும் இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதான 25 இந்திய மீனவர்களும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் சொல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ராஜபக்சக்களுடன் மீண்டும் இணையப்போவதில்லை!

## விமல் வீரவன்ஸ திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 02

ராஜபக்சக்களுடன் மீண்டும் இணையும் எண்ணம் தனக்கு இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

“மகிந்த ராஜபக்சவின் ஆலோசனையின் பிரகாரம் விமல் வீரவன்ஸவுடன் பேச்சு நடத்தினேன். அவர் மொட்டுக் கூட்டணியுடன் இணைவார். வாசுதேவ நாணயக்காரவும் வருவார்” என ராஜபக்ச குடும்ப உறுப்பினரும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில், தனக்கு அவ்வாறானதொரு எண்ணம் இல்லை, சர்வஜன அதிகாரத்துடன் தான் பயணம் தொடரும் என்று விமல் வீரவன்ஸ கூறினார்.

(அ)

# தேசிய தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட பெரும் தலைவரை இழந்துவிட்டோம்!

## சம்பந்தனுக்கு சிறிதரன் எம்.பி இரங்கல்

கிளிநொச்சி, ஜூலை 02

நீண்ட காலம் தமிழர்களை வழிநடத்திய ஒரு உன்னதமாக பெரும் தலைவரை தமிழ் தேசிய இனம் இழந்துவிட்டது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

உடல்நலக் குறைவு காரணமாக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று முன் தினம் இரவு காலமானார்.


அவரின் மறைவையொட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவட்டப் பணிமனை முன்றலில் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன், பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட சிறீதரன் எம்.பி-

சம்பந்தன் ஐயாவின் இழப்பு தமிழ் மக்களை பொறுத்தவரை காலத்தின் பெரும் இழப்பாகவே கருதப்படுகின்றது.

அவர் விட்டுச் சென்ற பணிகளை நாங்கள் ஒன்றாக இணைந்து, பயணித்து முன்னெடுப்பதே அவருக்கு நாங்கள் மரியாதை ஆகும்.




வடக்கு மற்றும் கிழக்கை இணைப்பதில் மூல காரணமாக இருந்து, தேசிய தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மிகப் பெரும் தலைவரை தமிழ்த் தேசியம் இழந்திருக்கின்றது.

இந்நிலையில், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்வோம்-என்றார்.

(அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, ஜூலை 02

புளூம்பேர்க் தரவுகளின்படி, வளர்ந்து வரும் நாடுகளில் வலுவான நாணயமாக இலங்கை ரூபாய் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 6 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

பாகிஸ்தான் ரூபாய் மற்றும் ரஷ்ய ரூபிள் ஆகியனவும் வலுப்பெற்றுள்ளதாக ப்ளூம்பெர்க் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# குழந்தை உறக்கத்திலிருந்தவேளை திடீரெனத் தீப்பற்றி எரிந்தது வீடு!

கிளிநொச்சி, ஜூலை 02

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் உள்ள கண்ணகி நகர் பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மதிய உணவு தயார் செய்துகொண்டிருந்தபோது வீடு தீ பிடித்து எரிந்துள்ளது.

சமையலில் ஈடுபட்ட குடும்பப் பெண் மீனை வெட்டுவதற்காக வீட்டிலிருந்து வெளியில் சென்றுபோது திடீரென வீடு தீப்பற்றி எரிந்ததை அவதானித்து ஓடிச் சென்று தொட்டிலில் படுத்துறங்கிய அவரது பிள்ளையை தூக்கியுள்ளார்.

இதன் பின்னர் அயலவர்கள் மற்றும் உறவினர்களின் துணையுடன் வீட்டில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்படுத்த முயன்றபோதும் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.





இதன்போது வீட்டில் இருந்த 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம், கையடக்கத் தொலைபேசி, 2 மீன் பிடிவலைகள், உடைகள் மற்றும் வீட்டில் இருந்த உபகரணங்கள் அனைத்தும் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது இடமின்றி அயலவர் வீட்டில் வசித்து வருகின்றனர்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org